2004 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திற்கு இந்த மீன் மார்க்கெட்டைக் கொண்டுபோக வேண்டும் என்பது. இப்போது அமைச்சர் அவர்கள் கூறுகிற இடமும்கூட, பயணியர் விடுதி இருந்த இடமும்கூட, நகரத்தினுடைய ஒரு மையப் பகுதி. அதைச் சுற்றிலும்கூட குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே நீங்கள் அதை மாற்றுகிறபோது நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய மக்கள் போராட்டத்தையோ அல்லது எதிர்ப்பையோ தெரிவித்து, என்னையும் நாளைக்குத் திட்டுவார்கள்; இந்த இடத்திற்கு ஏன் கொண்டு வந்தாய் என்று ஒரு நிலையை உருவாக்குவார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த டிராவலர்ஸ் பங்களா இருந்த இடம், இடிக்கப்பட்ட, இப்போது உபயோகத்தில் இல்லாத இடமாக இருந்தாலும்கூட, வணிக வளாகம் கட்டுவதற்காக அதற்கும் முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள்கூட—பைபாஸ் ரோடுக்கு அடுத்தபடியாக செல்லியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் எல்லாம் இருக்கின்றன. கழிவுநீர்ப் பண்ணை என்று தனியாக இடம் இருக்கிறது. இப்படி ஊருக்கு ஒதுக்குப்புறமாக அங்கே மீன் மார்க்கெட்டை கொண்டு வந்தால்தான் அங்கே இருக்கக்கூடிய மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பார்கள். ஆகவே, நீங்கள் Travellors Bungalow இடிந்து விழுந்த இடத்தில் இருக்கக்கூடிய இடத்திற்குக் கொண்டுபோவதைவிட ஊருக்கு ஒதுக்குப்புறமாக எடுத்துச் செல்வதற்கு, தாங்களே நேரில் வந்து ஆய்வு செய்துகூட, ஒரு முடிவை கூடிய விரைவிலே எடுத்து அறிவிப்பீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தை ஆய்வு செய்து சாத்தியக்கூறு இருப்பின் அந்த இடம் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**29—**

### ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***50311—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி ஒன்றியத்தில் அரியூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தால் செங்கரையூர், வடக்குச் செங்கரையூர், மீனவர் காலனி போன்ற பகுதிகள் மேம்பாடு அடையும். இது நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்று கேட்டுக்கொண்டு, லால்குடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கி அனுமதி வழங்கியதற்கு, பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் புதிய பேருந்து நிலையத்தின் பணி எப்போது முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியம், அரியூர் ஊராட்சியில், அரியூர் மற்றும் செங்கரையூர் ஆகிய இரண்டு குக்கிராமங்கள் அடங்கும். அரியூர் குக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 1,600. செங்கரையூர் கிராம மக்கள் தொகை சுமார் 1,400 ஆக